உ

சிவமயம்

யாழ். இளவாலை

அருள்மிகும் ஒல்லுடை ஞானவயிரவர்

# மும்மணி மாலை



**மகாகும்பாபிஷேக தின வெளியீடு**

பிரமாதி ஆனித்திருவோணம்

**1999.07.01**

உ
சிவமயம்

யாழ். இளவாலை
அருள்மிகும் ஒல்லுடை ஞானவயிரவர்

# மும்மணி மாலை

**பண்டிதர் சி. அப்புத்துரை**

**மகாகும்பாபிஷேக தின வெளியீடு**
பிரமாதி ஆனித்திருவோணம்
**1999.07.01**

உ

சிவமயம்

## சமர்ப்பணம்

அன்புடை அன்னை **சின்னத் தங்கம்**
அருமை அப்பா **சிறீரங் கமெனும்**
இருமுது குரவர் நினைவாய் ஒல்லுடை
பரவும் வயிரவர்ப் பணிந்து போற்றுமிம்
மும்மணி மாலையை முதல்வன் வயிரவர்
அம்மலர்த் தாள்களில் அணிந்தேத்தினனே.

**-ஆசிரியர்**

# வெளியீட்டுரை

இளவாலை அருள்மிகும் ஒல்லுடை ஞானவயிரவப் பெருமான் மீது கொண்ட பக்தி மேம்பாட்டின் காரணமாக, மயிலங்கூடல் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் பாடிய "ஒல்லுடை ஞானவயிரவர் மும்மணி மாலை" எனும் இந்நூலை மகாகும்பாபிஷேக தினவெளியீடாகத் தருவதில் நாம் பெரு மகிழ்வு கொள்கின்றோம்.

அழகிய மூவின மணிகளைக் கொண்டு ஆக்கப்படும் மும்மணி மாலை போன்று, நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, அகவல் ஆகிய மூவகைப் பாக்களைக் கொண்டு ஆக்கப்படும் சிற்றிலக்கியம் மும்மணிமாலை எனப்படும். வகைக்குப் பத்துப் பாக்களாக மாறி மாறி அந்தாதித் தொடையாக முப்பது பாக்களைக் கொண்டு நூல் முடிவு பெறும்.

பிரபந்த வகையைச் சேர்ந்த பக்தி இலக்கியமாகிய இந்நூலைப் படித்தும், பாராயணம் பண்ணியும், பலரும் பயன் பெறுவார்களாக.

**ஆலய பரிபாலனசபை** — **சைவப்புலவர் சு. செல்லத்துரை**
1999.07.01 — **போஷகர்.**





## யாழ். இளவாலை
## அருள்மிகும் ஒல்லுடை ஞானவயிரவர்
## மும்மணி மாலை

### காப்பு
### நேரிசை வெண்பா

பூமலியும் ஒல்லுடையிற் புக்கொளிரும் வைரவர்தம்
தாமலராம் பாதத்தைத் தோத்திரஞ்செய் – பாமலராம்
மும்மணி மாலையினை முட்டின்றிச் சூட்டுதற்குக்
கைம்மா முகத்திறையே காப்பு.

### நூல்
### கட்டளைக் கலித்துறை

1. வாய்த்த பிறவி வளம்பெற ஒல்லுடை வாழ்முதலைப்
போய்த்தொழு தேதினம் போற்று முயர்வாம் புகலடைந்தோம்
பேய்த்தேர் எனவோர் பிழைபடு தோற்றம் பிழைப்பித்தெமைச்
சேய்த்தாம் நிலைதவிர்த் தெந்தை அடிச்சிந்தை சேர்க்குவமே.

### அகவல்

2. சேர்ந்தனஞ் சிவனுடைச் செய்ய திருவடி
ஆர்ந்தனம் வயிரவ ராய வடிவினில்
சிவனவன் சிந்தையில் தெளிந்த உருவமே
அவனியில் அகந்தையை அழிக்க வந்தது
ஒல்லுடை உவந்துறை ஒருவனு மவ்வழி
தில்லையுட் டிருவெனத் தேர்ந்துநின் றனமே.

## நேரிசை வெண்பா

3. தேர்ந்தோஞ் சிவன்சிந்தைத் தேற லெனவந்து
சேர்ந்தொல் லுடைப்பதியின் செல்வமென்றாய்ச் ~ சார்ந்துறையும்
மக்கள் சிவவாழ்வை மாந்த அரவணைத்தாய்
எக்காலும் நீங்கோ மினி.

## கட்டளைக் கலித்துறை

4. இனியவ னாயெமக் கின்னரு ளாயெங்க ளீசனென்றாய்த்
தனிமுத லாய்ச்சடை தாங்கிய கங்கை தரித்தவனாய்ப்
பனிமலை யாய்மதி பாம்பணி யாய்பரை பங்கினனாய்ப்
புனிதனென் றொல்லுடை போயுறை வைரவ போற்றினமே.

## அகவல்

5. போற்றித் திருவடி புனைந்து புகழ்மொழி
ஏத்தி வயிரவ ராய சிவத்தினை
ஒல்லுடை உறைந்து உவப்பன செய்யும்
தில்லையுள் முதல்வனைச் சிவபெரு மானை
நினைந்து தொழுதோம் நீக்கமற் றுடனாய்
அனைத்து நிகழ்விலும் அணைத்தரு ளுவையே.

## நேரிசை வெண்பா

6. அருள்பிரமற் காக்க அவன்தலையைக் கிள்ளிப்
பொருள்பொதித்த செய்யவழிப் போக்கி ~ இருள்கடிந்தாய்
செல்வவைர வப்பெரும சேவடியாம் பேறடைய
ஒல்லும் வகைபணிப்பாய் ஓர்ந்து.

## கட்டளைக் கலித்துறை

7. ஓர்ந்துநீ ஒல்லுடை ஒண்பதி ஒன்றி உறைந்தெமது
தேர்ந்த திருவெனத் தெள்ளிய சிந்தையின் செல்வமெனத்
தீர்ந்த வுருவின னாம்சிவ மென்னும் வயிரவரே
சார்ந்தனம் எங்கள் தனிப்பெருந் தேவைத் தளர்விலையே.

## அகவல்

8. தளர்ந்த அறிவினன் தாழ்ந்த உணர்வினன்
வளர்ந்த காழ்ப்புணர் வாம்வளக் கயமுகன்
உரங்கெடுத் துருவழித் துவந்து தோலுரித்
திரங்கு மாறுமேற் போர்த்துக் காட்டிய
ஒல்லு டைப்பதி உறையும் வைரவர்
அல்லல்தீர் சிவனென அறிந்துகொண் டனமே.

## நேரிசை வெண்பா

9. கொண்டதொரு கொள்கை குலவும் வயிரவர்தான்
கண்டவுரு சங்கரனே கண்டுகொண்டோம் ~ பண்டையுள
சாத்திரங்கள் கூறுவதென் சம்புவுளத் தானவனாய்க்
காத்தளிக்கக் காதலித்தான் காண்.

## கட்டளைக் கலித்துறை

10. காண்பாம் நரசிம்ம மாம்மால் மயங்கிக் கறுத்தநிலை
வீண்பழி யோடு விளங்கு புகழை விலக்கியதே
மாண்புடைச் சங்கரன் மாலயன் காணா மலரடியோன்
காண்டற் கரியன் வயிரவ ராகிக் கனன்றனனே.

## அகவல்

11. கனன்று மாவுரி கண்டுநீள் சட்டையாய்ச்
சினந்து போட்டவெம் சித்தன் சிவத்தொடு
சட்டைநா தம்பெயர் தாங்கியும் நின்றனன்
தொட்ட வைரவர் சோதி சிவனுடைத்
தெள்ளு சிந்தைத் தெளிந்த தோற்றமென்
றுள்ளி உவந்திங் கோர்ந்து மகிழ்வமே.

### நேரிசை வெண்பா

12. மகிழ்ந்தோம் திருவிழா மாட்சியெலாங் கண்டு
நெகிழ்ந்துள்ளத் தேதினைந்து நின்றோம் – புகுந்தெமது
உள்ளப் பெருங்கோயி லுறையுத்த மன்கருணை
வெள்ளத்தி லேதிழைத்தோம் வேட்டு.

### கட்டளைத் கலித்துறை

13. வேண்டி யணைந்து வினைவறிந் தெங்கள் விருப்பறிந்து
தாண்டி யுளத்தினைத் தூயதா மாறு தொடரவைத்தே
ஆண்டியு மையனு மன்புட னொன்றி அகமகிழ
ஈண்டிய வொல்லுடை ஏழைபங் காளனை ஏத்தினமே.

### அகவல்

14. ஏத்தி இறைஞ்சுமெம் ஆனை முகத்தனை
தோத்திரத் தேவாந் தூயன்தன் மூர்த்தமாய்ச்
சாத்தி ரங்கள் சொலும்வழிக் கண்டனம்
ஒல்லு டைப்பதி உறையும் வயிரவர்
தில்லை முதல்வன் தேர்ந்த உருவமாய்
அல்ல லாயின அகலநின் றனரே.

### நேரிசை வெண்பா

15. நின்னடிக ளிற்பணிந்தோம் நீள நினைந்துனது
பொன்னென் புகழ்பாடிப் போற்றிசெய்தோம் – முன்னாக
ஒல்லுடைவா மூத்தமனை ஓர்ந்தோஞ் சிவமென்றே
யெல்லையிலா இன்பார்ந்த னம்.

### கட்டளைக் கலித்துறை

16. இன்று துணிந்தெம தின்னல் தவிர்த்திட ஏய்ந்தவழி
ஒன்றெம தொல்லுடை ஓர்ந்துறை ஐயனை உள்ளமதில்
நன்றெனக் கண்டுநாம் நாளும் வழுத்துவம் நாவினடம்
துன்றும் படியாகத் தோத்திரம் பாடித் துதிக்குவமே.



### அகவல்

17. துதித்துப் பிறவித் தொடக்கறுத் துவப்ப
விதித்த விதியை வேறா யமைக்க
சிவனவ னுளத்துத் தோன்றிய வுருவாய்த்
தவத்திரு வாகிய தனிப்பெருந் தேவை
மதித்தெ மொல்லுடை மருவிய இறையைப்
பதித்தெ முளத்திற் பரவிவேண் டுவமே.

### நேரிசை வெண்பா

18. பரவிப் பணிந்தெம் பவநோ யகற்ற
இரவலரா யொல்லுடையி னேங்கிப் – புரமெரிசெய்
புண்ணியனைப் போற்றிசைத்துப் போதொடுநீர்ப் பூசைசெய்தோம்
எண்ணநிறைத் தீடேற்று வாய்.

### கட்டளைக் கலித்துறை

19. வாய்ப்புடைத் தாகி வழிபடு வோர்கள்தம் வாழ்வொளிர
மாய்த்து வினையெலாம் மாணெழில் ஒல்லுடை மன்னுபதி
போய்த்தொழும் புண்ணியர் போக மளித்துப் புணரவைத்த
தாய்த்திரு வேதமிழ்த் தண்ணளி யேதயா தந்தருளே.

### அகவல்

20. அருளுவை அரவணைத் தனுதினம் வேண்டினம்
இருள்கடிந் தெம்முடை இழிநிலை போக்குவை
கயமுகன் உரியினைக் கவர்ந்தனை ஆண்டனை
பயமிலை நயந்தனம் பணிவொடு வணங்கினம்
வருமிடர் தீர்க்குவை வளமிகும் ஒல்லுடை
ஒருவனே ஏத்தினம் உவப்பொடேற் குவையே.

### நேரிசை வெண்பா

21. உவப்புடனே யேற்பாய் உணர்வழிந்து நின்றோம்
பவக்கடலைப் போக்கிடநாம் பார்த்தோம் – அவப்பெயர்கள்
வந்தணையு முன்பாக வாரியணைத் தொல்லுடையாய்
தந்தருள்வாய் உன்னடிகள் தான்.

### கட்டளைக் கலித்தறை

22. தானே வயிரவர் தாமென வந்த தகவுடையார்
மானோர் கரத்தில் மழுவுட னாயவர் ஒல்லுடையார்
வானோர்க் கரியர் மகவுக் கறியை வரித்தவராய்த்
தேனாய் மொழிசிறுத் தொண்டர் தருமமு தேற்றனரே.

### அகவல்

23. அமுத மாயெமக் கானந்தந் தந்தவர்
சுமுக மாகவெம் துன்பந் துடைத்தவர்
ஒல்லு டைப்பதி உவந்த ஒருவனாய்த்
தில்லை யில்நட மாடுஞ் சிவத்தினை
ஐயனை அண்டத் தப்பாலு மானானை
பைய வேயணைந் தின்பம் நுகர்வனே.

### நேரிசை வெண்பா

24. நுகர்ச்சிப் பொருளுணர்வை நுண்ணிதினி லோர்ந்து
சுகத்துக் குரியவரென் றெண்ணும் – இகத்திலுயர்
ஒல்லுடையின் வாழ்முதலை ஓர்ந்தெமராம் என்றாய்ந்து
தொல்லைதவிர்த் தின்புளரா வோம்.

### கட்டளைக் கலித்துறை

25. இன்பந் தருபவன் னெம்முட னாயவன் இப்பிறவித்
துன்பமென் றாய துனிப்பொருள் நீக்கியங் கொல்லுடையின்
அன்புக் கொருவன் அனைத்துமாய் நிற்பவன் அண்டினர்க்கோ
என்று மினியவன் ஏற்ற மளிப்பவன் எம்மிறையே.



### அகவல்

26. ஏற்ற மளித்தெம தினிய வாழ்வினும்
கூற்று வன்வந்து குலவும் போதிலும்
சார்ந்து தண்ணளி தருவதை வேண்டி
ஆர்ந்தொல் லுடையுறை ஐயனை வணங்கினம்
பண்டு நிறைந்த பழவினை போக
மண்டிடு மகிழ்வாம் மாண்பு பெறுவமே.

### நேரிசை வெண்பா

27. பெறுதற் கரிதென்னும் பேறாம் மனிதப்
பிறவிபெற்ற வாய்ப்பினையாம் பேணி – மறலிவரு
முன்பாக ஒல்லுடையின் முன்னவனை வந்தித்தோம்
இன்பம் இனிதாக வே.

### கட்டளைக் கலித்தறை

28. வேண்டுவ தென்னவென் றேயறி யாத வெறுவிலியை
ஆண்டுகொ ளென்ப தறமுடைத் தன்றென்ப தாரறிவார்
ஈண்டைய எம்நிலை இவ்வகைத் தாமெனில் ஏற்றபடி
தூண்டியங் கொல்லுடைத் தூயன்தன் பாதம் தொழுகுவமே.

### அகவல்

29. தொழுது நின்றவர் துன்பந் துறந்தனர்
எழுபி றப்பினு மின்ப மடைகுவர்
ஒளிரு மொல்லுடை யொண்பொருள் உவந்தவர்
துளியுந் துன்பத் தொடக்கில ராயினர்
வயிரவ ராய்வரு வாலறி வன்பதம்
உயிர்க்குயி ராமெனு ணர்ந்துபோற் றுவமே.

### நேரிசை வெண்பா

30. போற்றிசைத்து நாளெல்லாம் பூநீராற் பூசைசெய்து
காற்றுளதாம் போதினிலே காரியினை – ஏற்றருள
வேண்டிநின் றொல்லுடையில் வேதனைதீர்ந் தொன்றிநின்றோம்
மாண்பா யருள்புரிகு வாய்.

# அரும்பத விளக்கம்

| பாடல் இல : | | விளக்கம் |
|---|---|---|
| காப்பு | ~ | கைம்மா ~ யானை |
| 1 | ~ | பேய்த்தேர் ~ கானல், பொய்த்தோற்றம்<br>சேய்த்தாம் ~ தூரமான |
| 2 | ~ | தில்லையுட்டிரு ~ சிவன் |
| 4 | ~ | பரை ~ பார்வதி |
| 7 | ~ | ஒண்பதி ~ புகழ் பெற்ற இடம் |
| 9 | ~ | சம்புவுளத்தான் ~ சம்பு + உளத்தான் சிவனது உள்ளத்தின் இடமாக |
| 10 | ~ | கறுத்த நிலை ~ கோபித்த நிலை |
| 11 | ~ | சித்தன் ~ வயிரவர் |
| 13 | ~ | ஆண்டியுமையனும் ~ இரவலனும் புரவலனும்<br>ஏழைபங்காளன் ~ இரப்போர்க்கு உதவுபவன் |
| 17 | ~ | தொடக்கறுத்து ~ தொடரும் பிறவியை இல்லாமற் செய்து |
| 18 | ~ | இரவலராய் ~ இறைவனிடம் யாசித்து நிற்போராய் |
| 19 | ~ | தயா ~ அன்பு, அருள் |
| 25 | ~ | துனிப்பொருள் ~ வெறுப்பிற்குரியநிலை |
| 26 | ~ | ஆர்ந்தொல்வுடையுறை ~ விருப்புடன் ஒல்வுடையில் உறைகின்ற. |
| 27 | ~ | மறலி ~ இயமன் |
| 29 | ~ | துன்பத் தொடக்கு ~ துன்பத் தொடர்ச்சி |
| 30 | ~ | காரி ~ வயிரவர். |